செய்தி வெளியீடு எண்: 660 நாள்:29.09.2019

## செய்தி வெளியீடு

## இன்று (29.09.2019), மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்ற விழாவில் முடிவுற்ற திட்டப்பணிகளை திறந்து வைத்து, அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கி ஆற்றிய உரை

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா தெய்வத்தை வணங்கி,

இன்றையதினம் ஏழை, எளிய பெண்களுக்கு திருமண நிதியுதவியுடன் தாலிக்குத் தங்கம், அங்கன்வாடிப் பணியாளர்களுக்கு அலைபேசி மற்றும் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா, புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டும் விழா, முடிவுற்ற பணிகளின் திறப்பு விழா நிகழ்ச்சியில் கலந்து கொண்டுள்ள அனைவருக்கும் எனது வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பள்ளிக்கல்வித்துறையின் சார்பில் நபார்டு திட்டத்தின் கீழ் ஓமலூர் வட்டம், தேக்கம்பட்டி, கெங்கவல்லி வட்டம், தெடாவூர் மற்றும் ஆத்தூர் வட்டம், ஊனத்தூர் ஆகிய இடங்களில் அமைந்துள்ள அரசு மேல்நிலைப்பள்ளிகளுக்கு ரூபாய் 5 கோடியே 47 இலட்சத்து 85 ஆயிரம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள 10 கூடுதல் வகுப்பறைகள், அறிவியல் ஆய்வுக்கூடம், கழிப்பறைகள் கட்டடம், குடிநீர் வசதி மற்றும் சுற்றுச்சுவர் உள்ளிட்ட கட்டடங்களும் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

கால்நடை பராமரிப்புத்துறையின் சார்பில் நபார்டு திட்டத்தின் கீழ், சேலம் மாவட்டம், வாழப்பாடி வட்டம், விளாரிப்பாளையத்தில் ரூபாய் 31 இலட்சத்து 50 ஆயிரம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள கால்நடை மருந்தகக் கட்டடம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

சேலம் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தின் சார்பில் தேசிய பால்வளத்திட்டத்தின் கீழ், காரிப்பட்டி ஊராட்சி, வாழப்பாடி பேரூராட்சி, வி.புதுப்பாளையம், பேளூர் பேரூராட்சி, சந்திரப்பிள்ளை வலசு ஊராட்சி, உமையாள்புரம் ஊராட்சி, ஈச்சம்பட்டி ஊராட்சி, பெத்தநாயக்கன்பாளையம் பேரூராட்சி, எருமசமுத்திரம் நரசிங்கபுரம் நகராட்சி ஆகிய 8 இடங்களில் ரூபாய் 2 கோடியே 29 இலட்சத்து

88 ஆயிரம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 8 பால் குளிர்விப்பான் மையங்களும் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

சேலம் மாநகராட்சி சார்பில் சீர்மிகு நகரத்திட்டத்தின் கீழ், ரூபாய் 25 கோடியே 85 இலட்சம் மதிப்பீட்டில், வ.உ.சி.மார்க்கெட், சேலம் போஸ் மைதானம் மற்றும் வணிக வளாகம் மறுசீரமைப்பு பணிகளுக்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.

கால்நடை பராமரிப்புத்துறையின் சார்பில், ரூபாய் 3 கோடியே 74 இலட்சத்து 80 ஆயிரம் மதிப்பீட்டில், சேலம் மாநகராட்சி நரசோதிப்பட்டி, வீரபாண்டி, காடையாம்பட்டி ஒன்றியம் காருவள்ளி, கொளத்தூர், ஜலகண்டாபுரம், மேச்சேரி, நங்கவள்ளி சின்னக்கோனூர், ஏற்காடு முளுவி, தலைவாசல் ஒன்றியம் காட்டுக்கோட்டை, பெத்தநாயக்கன்பாளையம் ஆகிய 10 இடங்களில் கால்நடை மருந்தகக்கட்டிடங்கள் மற்றும் கால்நடை மருத்துவமனைக் கட்டடங்களுக்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.

பள்ளிக்கல்வித்துறையின் சார்பில் ரூபாய் 1 கோடியே 3 இலட்சத்து 10 ஆயிரம் மதிப்பீட்டில் கெங்கவல்லி அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, ஜலகண்டாபுரம் அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி, ஆத்தூர் அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி, பனங்காட்டூர் அரசு மேல்நிலைப்பள்ளி ஆகிய மேல்நிலைப் பள்ளிகளில் அறிவியல் ஆய்வகங்கள், கலை மற்றும் கைவினை அறை கட்டடம் மற்றும் கழிவறை கட்டடங்களும் என, ஆக மொத்தம் இன்றைய தினம் நடைபெறுகின்ற இவ்விழாவில் ரூபாய் 30 கோடியே 62 இலட்சத்து 90 ஆயிரம் மதிப்பீட்டில் 17 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி வைக்கப்பட்டுள்ளது.

இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் 2011–ஆம் ஆண்டு மே மாதம் திருமண நிதியுதவித் திட்டத்தின் கீழ் தாலிக்குத் தங்கம் வழங்குவதை முதன்முறையாக அறிமுகப்படுத்தினார்கள். அதன்படி, ஏழைப் பெற்றோர்களின் மகள், ஆதரவற்ற பெண்கள், மறுமணம் செய்து கொள்ளும் விதவைகள், ஏழை விதவையின் மகள், கலப்புத் திருமணம் செய்து கொள்ளும் தம்பதியர் ஆகியோர் பயன்பெறும் வகையில் இத்திட்டம் அமல்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ், பட்டதாரி அல்லாதாருக்கு ரூபாய் 25 ஆயிரமும், பட்டம் மற்றும் பட்டயப் படிப்பு படித்தவர்களுக்கு ரூபாய் 50 ஆயிரமும் வழங்கப்படுகிறது. மேலும், திருமாங்கல்யம் செய்வதற்கு முதலில்

4 கிராம் தங்கம் வழங்கப்பட்டது. மாண்புமிகு அம்மா அவர்கள் 2016–ஆம் ஆண்டு முதல் அதனை 8 கிராமாக உயர்த்தி வழங்கினார்கள்.

2011–ஆம் ஆண்டு முதல் 2019–ஆம் ஆண்டு வரையிலான 8 ஆண்டுகளில் 4,71,237 பட்டதாரி பெண்களுக்கும் 6,74,673 பட்டதாரி அல்லாத பெண்களுக்கும் என, ஆக மொத்தம் 11,45,910 பெண்கள் பயனடைந்துள்ளார்கள். இதற்காக 5,260.72 கிலோ தங்கம் வழங்கப்பட்டுள்ளது. இதுபோன்ற திட்டம் இந்தியாவில் எந்த மாநிலத்திலும் செயல்படுத்தப்படுவதில்லை.

பெண் குழந்தைகள் பிறந்துவிட்டது என்று முகம் சுழிக்கின்ற நிலையை மாற்றி, புரட்சித்தலைவி அம்மா அவர்கள், தாய்மார்கள் பெற்றெடுக்கின்ற குழந்தைகளை, தான் பெற்ற குழந்தைகளைப் போல் கருதி, தாயுள்ளத்தோடு அக்குழந்தைகளுக்கு 16 வகையான பொருட்கள் அடங்கிய அம்மா பரிசு பெட்டகம், கரு நல்ல முறையில் வளர்வதற்கு ஊட்டச் சத்துப் பெட்டகம் என அனைத்து உதவிகளையும் வழங்கியிருக்கின்றார்கள். சேலம் மாவட்டத்தில் 500 படுக்கைகள் கொண்ட மகப்பேறு மருத்துவப் பிரிவினை அம்மா அவர்கள் கொடுத்திருக்கின்றார்கள். ஏழைத் தாய்மார்கள் பெற்றெடுக்கும் குழந்தைகளுக்காக பச்சிளம் குழந்தை சிறப்பு சிகிச்சை முகாம் அமைக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு அம்மா அவர்கள் பெண்களுக்கென நிறைய சிறப்புத் திட்டங்களைச் செயல்படுத்தியிருக்கின்றார்கள். மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு அதிகளவில் கடனுதவி வழங்கிய மாநிலம் தமிழ்நாடு. அனைத்துத் துறைகளிலும் பெண்கள் முன்னுக்கு வருவதற்கு அடித்தளமாக விளங்கியவர் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் தான் என்பதை இந்த நேரத்தில் பெருமையுடன் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். தமிழகத்தில் உயர்கல்வி படிப்பவர்களின் சதவிகிதம் 49–ஆக உயர்ந்துள்ளதற்கு பெண்கள் அதிகமான அளவில் கல்வி பயில்வது தான் காரணம். கடந்த 8 ஆண்டுகளில் சேலம் மாவட்டத்தில், திருமண நிதியுதவி திட்டத்தின் கீழ், 237.50 கிலோ கிராம் தங்கம் ஏழை, எளிய பெண்களுக்கு வழங்கியிருக்கின்றோம்.

சமூக நலத்துறையின் சார்பில் 2019–2020ஆம் ஆண்டிற்கு தமிழ்நாடுஅரசு திருமண நிதியுதவித் திட்டத்திற்கு ரூபாய் 726.32 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

சேலம் மாவட்டத்தில் இந்த ஆண்டு திருமண நிதியுதவித் திட்டத்தின் கீழ் 6000 ஏழைப் பெண்களுக்கு ரூபாய் 23 கோடியே 39 இலட்சத்து 75 ஆயிரம் திருமண நிதியுதவியும், ரூபாய் 18 கோடியே 73 இலட்சம் மதிப்பிலான தாலிக்குத் தங்கமும் வழங்கப்படவுள்ளது.

இன்றையதினம் இந்நிகழ்ச்சியின் மூலம் 200 ஏழைப் பெண்களுக்கு திருமண நிதியுதவியுடன் தாலிக்குத் தங்கம் வழங்கப்பட்டுள்ளது.

இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு மக்களின் அரசு. கிராம மற்றும் நகர்ப்புறங்களில் வாழ்கின்ற அனைத்துத் தரப்பு மக்களுக்கும், அவர்களின் தேவைகளை அறிந்து திட்டங்களை நிறைவேற்றித் தருகின்ற அரசு மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு. இந்த அரசுக்கு நீங்கள் நல்லாதரவு தரவேண்டுமென்று கேட்டு விடைபெறுகின்றேன்.

நன்றி, வணக்கம்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**